இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
புதன்கிழமை 07-05-2025

# பீகாருக்காக மாபெரும் பொய்!

மக்கள் தொகைக் கணக்கெடுப்புடன் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று சொன்னபோதெல்லாம் அதை, 'நக்சலைட் பார்வை' என்று சொல்லி வந்த பிரதமர் மோடி, இப்போது திடீரென மனம் மாறியது ஏன்? எதற்காக? என்றால் பீகார் தேர்தலுக்காக நடத்தப்படும் நாடகம் இது. நிதீஷ் குமாரை வைத்து பீகாரை அபகரிக்கலாம் என்று நினைத்தார்கள். அது தேறாது என்று தெரிந்ததும், சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்துகிறோம் என்று கிளம்பி இருக்கிறார்கள்.

2023 ஆம் ஆண்டு தெலுங்கானா மாநிலத்தில் பரப்புரை செய்ய வந்த பிரதமர் மோடி அவர்கள், "சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தி மக்கள் தொகை அடிப்படையில் சமூகங்களுக்கு பிரதிநிதித்துவம் வழங்க வேண்டும் என காங்கிரசுக் கட்சி சொல்கிறது. அடுத்ததாக தொகுதி மறுவரையறை நடக்க உள்ளது. காங்கிரசுக் கட்சி சொல்வதைப் போல மக்கள் தொகையின் அடிப்படையில் மக்களவைத் தொகுதிகள் மறுவரையறை செய்யப்பட்டால், தென் மாநிலங்கள் 100 தொகுதிகளை இழக்க நேரிடும். தென்னிந்திய மக்கள் இதனை ஏற்பார்களா?" என்று கேட்டார் பிரதமர். காதைச் சுற்றி மூக்கைத் தொட முயற்சித்தார் பிரதமர். சாதிவாரி கணக்கெடுப்பு, மக்கள் தொகை கணக்கெடுப்பு நடத்தினால் தொகுதிகள் குறையும் என்று முதலில் மிரட்டியவர் அவர் தான். அத்தகைய பிரதமர் மோடிக்கு திடீர் மனமாற்றம் ஏன் வந்தது? எதனால் வந்தது?

சாதிவாரிக் கணக்கெடுப்பு நடத்த வேண்டும் என்று தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த ஆண்டு ஜனவரி மாதமே தீர்மானம் கொண்டு வந்தார் முதலமைச்சர் மாண்புமிகு மு.க.ஸ்டாலின் அவர்கள். அந்த தீர்மானத்தை உடனடியாக பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியும் வைத்திருந்தார்.

**"இந்திய மக்கள் அனைவருக்கும் கல்வி, பொருளாதாரம், வேலை வாய்ப்பு ஆகிய அனைத்திலும் சம உரிமையும், சம வாய்ப்பும் கிடைப்பதை உறுதி செய்யும் வகையில் திட்டங்களைத் தீட்டி, சட்டங்கள் இயற்ற வழி வகை செய்ய சாதிவாரியான மக்கள்தொகை கணக்கெடுப்பு அவசியம் என்று இப்பேரவை கருதுகிறது. எனவே 2021-ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டிய மக்கள்தொகைக் கணக்கெடுப்பை உடனே தொடங்க வேண்டுமென்றும், அத்துடன் இம்முறை சாதிவாரியான கணக்கெடுப்பையும் இணைத்தே நடத்தவேண்டும் என்றும் ஒன்றிய அரசை இப்பேரவை ஒருமனதாக வலியுறுத்துகிறது"** - என்பதுதான் தமிழ்நாடு சட்டமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் ஆகும். இந்த 15 மாதமாக ஒன்றிய அரசு என்ன செய்து கொண்டிருந்தது? ஏன் அதனை ஒப்புக் கொள்ளவில்லை?

கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் போதே, 'இந்தியா கூட்டணி ஆட்சிக்கு வந்தால் சாதிவாரிக் கணக்கெடுப்பை நடத்துவோம்' என்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சொல்லி வந்தார்கள். ராகுல் காந்தி அனைத்துக் கூட்டங்களிலும் இதனைச் சொல்லி வந்தார். "எங்கள் கூட்டணி ஆட்சிக்கு வந்தால் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும். 70 ஆண்டுகளுக்குப் பிறகு நாடு எடுக்கும் மிகமுக்கியமான நடவடிக்கையாக இது இருக்கும். இந்த கணக்கெடுப்பின் மூலம் நாட்டின் தற்போதைய நிலை எவ்வாறு உள்ளது என்பதை அறிந்து கொள்ள முடியும். அதன்பிறகு தான் நாடு அடுத்து எந்த திசையில் பயணிக்க வேண்டும் என்பதை மதிப்பீடு செய்ய முடியும். எனக்கு சாதியில் ஆர்வம் இல்லை, நியாயத்தில் ஆர்வம் உள்ளது. சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தினால் 90 விழுக்காடு மக்களுக்கு நியாயம் கிடைத்தே தீரும்" என்று சொன்னார் ராகுல். அப்போதெல்லாம் இதனை ஏற்காதவர் பிரதமர் மோடி அவர்கள். அவர் மூன்றாவது முறையாக ஆட்சிக்கு வந்து ஓராண்டு காலம் ஆகப் போகிறது. இந்த ஓராண்டு காலமும் இதைக் கண்டுகொள்ளாமல்தான் இருந்தார்.

**மக்கள் தொகைக் கணக்கெடுப்புச் சட்டம், அதாவது, Census Act 1948-ன்கீழ் ஒன்றிய அரசு தான் இந்தப் பணியைச் செய்ய வேண்டும். அரசியலமைப்புச் சட்டம் பிரிவு 246-ன்படி மக்கள்தொகை கணக்கெடுப்பு ஒன்றிய அரசின் பட்டியலில் வைக்கப்பட்டுள்ளது. 10 ஆண்டுகளுக்கு ஒரு முறை மேற்கொள்ள வேண்டிய அடிப்படையான பணி அது. மக்கள்தொகை கணக்கெடுப்பினை 2021-ஆம் ஆண்டு மேற்கொண்டிருக்க வேண்டும். அதைச் செய்யவில்லை பா.ஜ.க. அரசு. அதற்கான எந்த முயற்சியும் 2025 வரை எடுக்கவில்லை. இப்போது திடீரென்று ஞானோதயம் எதனால் வந்தது?**

பிரிட்டிஷ் அரசு சாதிவாரி கணக்கெடுப்பை 1931 ஆம் ஆண்டு எடுத்தது. அதன்பிறகு எடுக்கப்பட்டவை அனைத்தும் மக்கள் தொகை கணக்கெடுப்புகள்தான். காங்கிரஸ் அரசு 2011 ஆம் ஆண்டு சாதி வாரி கணக்கெடுப்பு நடத்தியது. ஆனால் அதனை அவர்கள் வெளியிடவில்லை. வெளியிடலாம், வெளியிடக் கூடாது என்று அமைச்சரவைக்குள் இருவேறு கருத்துக்கள் ஏற்பட்டது. 2014 ஆம் ஆண்டு அவர்கள் ஆட்சி முடிந்தது. அடுத்து வந்த பா.ஜ.க. அரசு அது குறித்து முடிவே எடுக்கவில்லை. 2021 ஆம் ஆண்டில் கொரோனா பெருந்தொற்றை காரணமாக்கி மக்கள் தொகை கணக்கெடுப்பை பா.ஜ.க. அரசு நடத்தவில்லை. சமூகத்தில் அனைத்து பிரிவினருக்கும் அவர்களது எண்ணிக்கைக்கு தகுந்த உரிமைகள் கிடைக்க வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்ளாத உயர் வகுப்பினர் அமைப்பாக பா.ஜ.க. இருப்பதால்தான் இதில் அக்கறை காட்ட மறுத்து வந்தது பா.ஜ.க.

**பெண்களுக்கு 33 விழுக்காடு இடஒதுக்கீடு கொடுத்ததாக பீற்றிக் கொள்கிறார்கள். மக்கள் தொகை கணக்கெடுப்பு முடிந்தபிறகு, தொகுதி மறுவரையறை முடிந்த பிறகு என்று அதற்கும் கால அளவு வைத்து விட்டார்கள். இவை இரண்டும் முடிய இன்னும் பத்தாண்டுகள் ஆகும் என்பதை அனைவரும் அறிவோம். பெண்களுக்கு உரிமை தரக் கூடாது என்று நினைக்கும் கட்சி தான் ஆர்.எஸ்.எஸ். - பா.ஜ.க. கும்பல்.**

**அந்த வகையில் சாதிவாரி கணக்கெடுப்பு நடத்தப்படும் என்று இப்போது சொல்வதும் கண்துடைப்புதான். அதற்கான நிதி ஒதுக்கப்படவில்லை. எப்போது தொடங்கும் என்றும் சொல்லப்படவில்லை. பொத்தாம் பொதுவாக கொள்கை முடிவு போல் அறிவித்துள்ளார்களே தவிர, செயல் முடிவாக அறிவிக்கவில்லை.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (5.5.2025) முகாம் அலுவலகத்தில், மேற்கு ஆஸ்திரேலியா பல்கலைக் கழகத்தின் வேந்தர் டாக்டர். டயானா ஸ்மித் கேண்டர், துணை வேந்தர் திருமதி. ஜெனிஃபர் ஹோவெல் ஆகியோர் சந்தித்து பேசினர். இச்சந்திப்பின்போது, தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உயர்கல்வித் துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, மேற்கு ஆஸ்திரேலியா அரசின் வணிக மேம்பாட்டு மேலாளர் திருமதி. சுவாதி பாலசுப்ரமணியன் ஆகியோர் உடனிருந்தனர்.

# வாழ்க முதல்வரின் தமிழர் தொண்டு! வெல்க திராவிட மாடல் ஆட்சி!

## முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு – இனமானப் பேராசிரியரின் புதல்வர் அ.அன்புச்செல்வன் பாராட்டுக் கடிதம்!

**சென்னை, மே 7 -**

**கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களைப் பாராட்டி, இனமானப் பேராசிரியர் அவர்களின் புதல்வர் அ.அன்புச்செல்வன் அவர்கள், முதல்வருக்கு எழுதியுள்ள கடிதம் வருமாறு:-**

**அன்புள்ள நண்பர், முதல்வர் அவர்களுக்கு, சீரிய அன்பு வணக்கம்,**

திராவிட மாடல் ஆட்சியின் சிறப்பான நான்காண்டு ஆட்சிச் சக்கரத்தை வெற்றிகரமாக நகர்த்தி, ஐந்தாவது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் தங்கள் தலைமையிலான திராவிட மாடல் ஆட்சிக்கு, இனமானப் பேராசிரியர் இல்லத்து வாழ்த்துகள்.

2026-ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தங்கள் தலைமையில் களம் கண்டு மீண்டும் படைப்போம் திராவிட மாடல் ஆட்சி 2.0.

திராவிட மாடல் ஆட்சியின் பல்துறைச் சாதனைகளுக்குச் சொந்தக்காரர் தாங்கள். திராவிட மாடல் ஆட்சி என்பது கொள்கைகளின் ஆட்சி. கழக ஆட்சி என்பது திராவிட இயக்கத்தின் நோக்கம் வெற்றி பெற அமைக்கப்பட்டுள்ள ஆட்சியாகும். தனிமனிதனின் ஆட்சியல்ல திராவிட மாடல் ஆட்சி!

சாமானிய மக்கள் வாழ்வில் முன்னேற்றம் அடைய திராவிட இயக்கம் வகுத்த கொள்கைகள், குறிக்கோள்கள் வெற்றிக்காகக் கண்ட ஆட்சியாகும் திராவிட மாடல் ஆட்சி.

சமீபத்தில் தமிழவேள் பி.டி.ராஜன் அவர்களின் நினைவைப் போற்றும் வகையில் நடைபெற்ற புத்தக வெளியீட்டு விழாவில் உரையாற்றிய தாங்கள், "திராவிட மாடல் ஆட்சி என்பது நீதிக் கட்சி ஆட்சியின் நீட்சி" என்றுரைத்தீர்கள். ஆம் அது முற்றிலும் உண்மை, நீதிக் கட்சியின் நிறுவனர்களில் ஒருவரான டாக்டர் நடேசனார், பிராமணர் அல்லாதவருக்கு கல்விதான் அழியாச் சொத்து; அதை அடைவதற்கு உரிய உதவிகள் பெற்றிட பிராமணர் அல்லாத தமிழர்களுக்குத் தங்குமிடம் மற்றும் கல்வி பயில சென்னை திருவல்லிக்கேணியில் ஒரு விடுதியை 1917களிலேயே ஆரம்பித்து நடத்தினார்.

அதற்கு இணையாக திராவிட மாடல் ஆட்சியில் "நான் முதல்வன்" என்ற முத்தான திட்டத்தை திராவிட மாடல் ஆட்சி அறிவித்ததன் பயனை தமிழ்நாட்டைச் சேர்ந்த ஏழை எளிய இளைஞர்கள் பெறுகிறார்கள்.

சென்னையில் அமைந்துள்ள தனியார் பயிற்சி மையங்கள் ஐ.ஏ.எஸ். தேர்விற்கு பல லட்சங்களை கட்டணமாக வசூலித்து பயிற்சி அளித்து வருகின்றனர், அதிகக் கட்டணம் காரணமாக பொருளாதாரத்தில் நலிவடைந்த தாழ்த்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு இப்பயிற்சியும், எட்டாக்கனியாக இருந்தது. அதன் விளைவாக தமிழ்நாட்டு மாணவர்கள் இப்போட்டித் தேர்வில் வெற்றி பெற முடியாமல் போனது.

இந்நிலையில் ஏழை எளிய மாணவர்கள் பயனடைய திராவிட மாடல் அரசு "நான் முதல்வன்" என்ற அரிய திட்டத்தை அறிவித்தது. இத்திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் தேர்விற்குத் தயாராகி வரும் ஆர்வலர்களை மதிப்பீட்டுத் தேர்வு நடத்தி 1000 இளைஞர்கள் தேர்வு செய்யப்படுகின்றனர். அத்தகைய மாணவர்களுக்கு மாதந்தோறும் ரூபாய் 7,500 திராவிட மாடல் அரசு வழங்கி வருகிறது.

முதல்நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்று முதன்மைத் தேர்வுக்குத் தயாராகும் மாணவர்களுக்கு ரூபாய் 25,000 ஊக்கத் தொகையாக வழங்கப்படுகிறது.

"நான் முதல்வன்" திட்டம் சென்னையில் மட்டுமல்லாமல் மதுரை மற்றும் கோவையிலும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு நடைபெற்ற குடிமைப் பணித் தேர்வில் (UPSC IAS ) "நான் முதல்வன்" திட்டத்தின் கீழ் படித்த 50 பேர் தேர்ச்சி பெற்று ஐ.ஏ.எஸ். ஆனார்கள் என்பது பெரு மகிழ்ச்சியளிக்கிறது.

### நவீன வசதிகளுடன் உயர் சிறப்பு மையம்!

இந்திய குடிமைப் பணித் தேர்வில் வெற்றி பெறுபவர்களின் எண்ணிக்கை கடந்த ஆண்டுகளை விட "நான் முதல்வன்"திட்டத்தின் பயனாக மீண்டும் உயரத் தொடங்கியுள்ளது.

இவ்வெற்றிக்காக உங்களையும், சிறப்பு



செயலாக்கத் திட்டத்தின் அமைச்சர் இளந்தலைவர் உதயநிதியையும் பாராட்டக் கடமைப்பட்டுள்ளேன்.

சட்டமன்றத்தில் "நான் முதல்வன்" திட்டத்தின் வெற்றியைப் பாராட்டி சட்டமன்ற உறுப்பினரான எனது மகன் வெற்றிஅழகன் உரையாற்றியவுடன், தாங்கள் இத்திட்டத்திற்காக சென்னை செனாய் நகரில் 500 மாணவர்கள் தங்கிப் பயிலக் கூடிய வகையில் அனைத்து நவீன வசதிகளுடன் ரூபாய் 40 கோடியில் 'உயர் சிறப்பு மையம்' அமைக்கப்படும் என்று அறிவித்தது, மிகவும் போற்றப்பட வேண்டியது. இதன்மூலம் சமுதாயத்தின் அடித்தட்டு மாணவர்கள் பயன் பெறுவார்கள்.

ஆக உண்மையில் திராவிட மாடல் ஆட்சி என்பது நீதிக் கட்சியின் நீட்சி என்பது இத்திட்டத்தின் மூலம் நிரூபணமாகியுள்ளது.

திராவிட மாடல் ஆட்சியின் சாதனைகள் பலப் பல, அச்சாதனைகளின் பட்டியல் வெகு நீளம். அத்தகைய சாதனைகளுள் ஆகச் சிறந்தது "நான் முதல்வன்" திட்டமாகும். 'ஒரு பானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்' என்ற பொன்மொழிக்கு இதுவே சிறந்த உதாரணம்.

'சான்றோன் ஆக்குவது தந்தையின் பணி' என்று வள்ளுவம் கூறுகிறது, அப்படிப்பட்ட பணியை "நான் முதல்வன்" மற்றும் "புதுமைப் பெண்" திட்டம் மூலம் ஒளிமயமான எதிர்காலத்தை உருவாக்கும் தங்களை "அப்பா" என்று அன்பொழுக இளம்தலைமுறையினர் அழைப்பது சாலப் பொருத்தமே.

### வரலாற்றின் மைல்கல்!

ஒன்றியத்தை ஆளும் பா.ஜ.க. அரசுக்கு மாற்றான அரசியல் கட்சி மாநிலத்தில் ஆண்டால் அத்தகைய அரசுக்கு பல்வேறு விதத்திலும் குடைச்சல் கொடுப்பது ஒன்றிய ஆட்சியாளர்களின் வழக்கம், ஒன்றிய அரசின் பிரதிநிதியான ஆளுநரை வைத்துக் கொண்டு கொல்லைப்புறம் வழியாக இரட்டை ஆட்சியை நடத்துவது ஒன்றிய அரசின் வாடிக்கை, அத்தகைய ஆளுநரின் ஒத்துழையாமையை உச்சநீதி மன்றத்தில் சட்டப் போராட்டம் நடத்தி, மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசின் உரிமையை மீட்டெடுத்தது மாநில சுயாட்சி வரலாற்றில் மைல்கல்.

எதேச்சாதிகார மனப்பான்மையுடன் மாநில அரசை ஆட்டிப்படைக்கும் ஒன்றிய ஆட்சியாளர்களைக் கண்டு சிறிதும் பதறாமல் கழகத்தின் கொள்கைவழி நின்று துணிச்சலுடன் எதிர்த்து வருகிறீர்கள். உங்கள் மனோதிடம் போற்றப்பட வேண்டியதாகும். எத்தகைய எதிர்ப்புகள் வந்த பொழுதிலும் நிலை தடுமாறாமல் தமிழ்நாட்டின் நலனைக் காத்திடுவதில் தாங்கள் காட்டும் உறுதியைக் கண்டு நாடே வியக்கிறது. தேசிய ஊடகங்களின் தலைப்புச் செய்தியே தாங்கள்தான். இதனைக் கண்ட கழகத்தவர் பூரிப்பும், பெருமிதமும் கொள்கின்றனர்.

ஒன்றிய அரசின் நிதிப்பகிர்வில் பாரபட்சம், ஒதுக்கப்பட்ட கல்வி நிதியினை நிறுத்தி வைத்தல் என்று பலவித அச்சுறுத்தல்களைப் பற்றி சட்டமன்றத்தில் நீங்கள் பேசும்பொழுது பதிவிட்டதை மீள்பதிவிடுகிறேன்;

**"மேலே பாம்பு, கீழே நரிகள்; குதித்தால் அகழி, ஓடினால் தடுப்புச் சுவர் இத்தடைகளைத் தாண்டித் தான் திராவிட மாடல் ஆட்சியாக, சாதனைச் சரித்திரம் படைத்து, திராவிட மாடல் அரசு வெற்றிகரமாக தகத்தகாய மாக ஒளி வீசுகிறது"**

### மகத்தான சாதனை!

இத்தகைய தடைகளைத் தாண்டி தங்களின் நிர்வாகத் திறன் காரணமாக தமிழ்நாட்டின் நலனை முன்னெப்பொழு தையும் விட சிறப்பாகப் பாதுகாத்து வருகின்றீர்கள். அதற்குச் சான்றாக விளங்குவது சமீபத்திய ஒன்றிய அரசின் புள்ளி விவரங்கள், தமிழ்நாட்டின் பொருளாதார வளர்ச்சி விகிதம் தொடர்ச்சியாக 8 சதவீதம் அல்லது அதற்கு மேலான வளர்ச்சியை எய்தி வருகிறது, இந்த ஆண்டு அதாவது 202425 ஆம் ஆண்டில் 9.69 சதவீத வளர்ச்சியை எட்டியுள்ளது, இது ஒரு மகத்தான சாதனை.

கல்வித் துறை, சுகாதாரத்துறை, தொழிற்துறையின் அபார வளர்ச்சி, விவசாயப் பொருட்களில் உற்பத்திப் பெருக்கம், சிறு குறு தொழில் நிறுவனங்களின் வளர்ச்சி, புத்தாக்கத் தொழில் முயற்சிகளில் பெருத்த முன்னேற்றம் என்று பலப் பல துறைகளிலும் சாதனைச் சரித்திரம் தொடர்கிறது.

'நிதி ஆயோக்' வெளியிட்டுள்ள தரவரிசையில் சமூக முன்னேற்றக் குறியீடுகளில் தமிழ்நாடு முதலிடம் வகிக்கிறது.

இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை தாக்கலோடு 14/03/25-ஆம் தேதியன்று சட்டப் பேரவை கூட்டத் தொடர் துவங்கியது, தொடர்ந்து 36 நாட்கள் சட்டப் பேரவை கூட்டத்தொடர் எவ்வித அசம்பாவிதச் சம்பவமும் இன்றியும், சட்டசபையின் மாண்பிற்கு குந்தகம் விளையாமலும், அரசியல் ஆரோக்கியத்துடன் எதிர்கட்சிகளுக்கும் நிறைய வாய்ப்பளித்து சிறப்புற நடைபெற்றது. பிரதமர் மோடியைப் போல் அல்லாமல் நமது திராவிட மாடல் நாயகரான தாங்கள் அவையில் அமர்ந்திருந்து தேவைப்படும்போது மட்டும் அவை நடவடிக்கைகளில் குறுக்கிட்டது, சட்டமன்ற மரபுகளுக்கு தாங்கள் எவ்வளவு முக்கியத்துவம் அளித்தீர்கள் என்பதற்குச் சான்றாக உள்ளது.

இக்கூட்டத் தொடரில் பல அறிவிப்புகள் வெளியிடப் பட்டன. அதில் நான்கு அறிவிப்புகள்; காலத்தை வென்று மக்கள் மனதில் நிலைத்து நிற்கும், முதலாவதாக, குரலற்றவர்களின் குரலாக தாங்கள் அறிவித்த மாற்றுத் திறனாளிகளுக்கு உள்ளாட்சி அமைப்புகளில் பிரதிநிதித்துவம் என்பது மாற்றுத் திறனாளிகளின் குரல் தமிழகமெங்கும் எதிரொலிக்க வழிவகை செய்துள்ளது.

இரண்டாவது, மாநில சுயாட்சி உரிமைத் தீர்மானமும், ஒன்றிய மாநில அரசுகளின் உறவுகளை ஆராய அமைக்கப்பட்டுள்ள குழுவும்.

### முத்தமிழறிஞர் பெயரில் பல்கலைக்கழகம்!

மூன்றாவதாக, "கும்பகோணத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பெயரால் பல்கலைக்கழகம் அமைக்கப்படும்" என்ற அறிவிப்பும் அதிமுக்கியமானது. பன்முக ஆற்றல் கொண்ட கலைஞர் பெயரால் ஒரு பல்கலைக்கழகம் உருவாக்கப்படுவது, அதுவும் திராவிடத்தின் தொட்டிலாக விளங்கிய கும்பகோ ணத்தில் அமையவுள்ளது என்ற அறிவிப்பு மகிழ்வை அளிக்கவல்லது.

நான்காவதாக "காலனி" என்ற சொல்லை திராவிட மாடல் அரசு எல்லாத் தளங்களில் இருந்தும் நீக்கியது, தமிழ்நாட்டின் சாதிகளற்ற சமத்துவம் தேடும் பயணத்தில் ஓர் விடிவெள்ளி.

இப்படியான சாதனைச் சரித்திரம் தொடர்ந்திட தங்கள் தலைமையில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமைய, மாநில உரிமைகளை மீட்டெடுக்க, உண்மையான கூட்டாட்சி மலர, மொழி உரிமையினைப் பாதுகாத்திட, அரசியலமைப்புச் சட்டம் காப்பற்றப்பட திராவிட மாடல் நல்லாட்சி தொடர்ந்திட, கழகத்தவர் அனைவரும் உறுதியுடன் பாடுபட்டு வெற்றிக் கனியைப் பறிக்க உறுதியேற்போம்.

ஒன்றிய அரசின் ஒற்றைக் கலாச்சாரத்தை எதிர்த்துப் போராடும் கழகத் தலைவரின் கரத்தை வலுப்படுத்துவோம்.

தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடு வெல்லும் ! படைப்போம் வரலாறு!

**வாழ்க தங்கள் தமிழர் தொண்டு!**
**வெல்க திராவிட மாடல் ஆட்சி!!**
**வெல்க திமுக!!!**

**இவண்,**

**அ. அன்புச்செல்வன்**

05-05-2025